[2011 பிப்ரவரி 9

39—

## தொழிற்கூடம்

*104557—திரு. பெ. மோகன்:

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, வெள்ளப்பட்டி கிராமத்தில் மீன் பதனிடும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியத்துக்குட்பட்ட வெள்ளப்பட்டி மீனவர் கிராமத்தில், மீன் பதனிடும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்:

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி ஆகும். வெள்ளப்பட்டி, துபாஷபட்டி, அரைவக்குளம், வேப்பலோடு, பட்டிணமருதூர் போன்ற கிராமங்களில் உள்ள மீனவர்கள் மீன் பிடித்து விற்று வாழ்கிறார்கள். இவர்கள் கடலில் மீன்பிடித்து கடற்கரைக்குக் கொண்டுவந்தவுடன் மீன்களை விற்பனை செய்கின்றனர். விற்பனை செய்த மீன்கள் போக, மீதி மீன்களை கெட்டுப்போகாமல் வைப்பதற்கு மீனவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர். எனவே, மீனவர்கள் பிடித்து வந்த மீன்களில் விற்பனை செய்தது போக, மீதம் உள்ள மீன்களைப் பாதுகாப்பதற்கு, எனது ஒட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள வெள்ளப்பட்டி கிராமத்தில் மீன் பதனிடும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

*2011 பிப்ரவரி 9]*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் ஒன்றியத்திற்குட்பட்ட, வெள்ளப்பட்டி மீனவர் கிராமத்தில், தற்போது பிடிக்கப்படுகின்ற மீன்களில், 20 சதவீதம் உள்ளூர் மக்கள் தேவைக்கும், 60 சதவீதம் மீன்கள் வரை தலைச்சுமை வியாபாரிகளும் மற்றும் வெளியூர் பெரிய வியாபாரிகளும் வியாபாரத்திற்குப் பெற்றுச் செல்கின்றனர். மீதம் உள்ள 20 சதவீதம் மீன்கள் பதப்படுத்தப்பட்டு, கருவாடாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வெள்ளப்பட்டி மீனவர் கிராமத்தின், 10 கிலோ மீட்டர் சுற்றளவில் இரண்டு தனியார் பதப்படுத்தும் நிறுவனங்கள், மீன்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றன. இருப்பினும், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, வெள்ளப்பட்டி கிராமத்தில் மீன் பதனிடும் தொழிற்கூடம் அமைக்கும் சாத்தியக்கூறு பற்றி ஆராய்ந்து அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்.*

திரு. பெ. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள மீனவர்கள் சுமார் 1,200 நாட்டுப் படகுகளின்மூலம் பல மணி நேரம் கஷ்டப்பட்டு மீன்பிடித்து வருகிறார்கள். அப்படிக் கொண்டு வரும் மீன்களைச் சேமிப்பதற்கு தூத்துக்குடிக்கு செல்ல வேண்டியுள்ளது. தூத்துக்குடிக்கு கொண்டு செல்வது மிகவும் கஷ்டமானது. போக்குவரத்துப் பிரச்சினை உள்ளது. மீன்களை தூத்துக்குடிக்குக் கொண்டு செல்கின்றபோது காலதாமதம் ஆகின்றது. ஆகையால், கெட்டுப்போகும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகையால், வெள்ளப்பட்டி கிராமத்தில் இந்த ஆண்டே மீன் பதப்படுத்தும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யவேண்டும். அதோடுமட்டுமல்லாமல், தமிழகத்தில் எத்தனை மீன்பிடித் துறைமுகங்கள் உள்ளன? தமிழகத்தில் எத்தனை நாட்டுப் படகுகள்மூலம் மீனவர்கள் மீன் பிடிக்கின்றனர்? தமிழகத்தில் எத்தனை மீன் பதனிடும் தொழிற்கூடங்கள் உள்ளன? நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் எத்தனை புதிய மீன் பதனிடும் தொழிற்கூடங்கள் அமைத்துள்ளீர்கள்? இதுவரை எத்தனை சட்டமன்ற உறுப்பினர்கள் மீன் பதனிடும் . . .*

[2011 பிப்ரவரி 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்கிற கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் சம்மந்தமே இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு மீனவளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள், 5-வது முறையாக தமிழகத்தின் வரலாற்று முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழக வரலாற்றில், இதுவரையில் இல்லாத அளவுக்கு, குறிப்பாக, நம்முடைய மீனவ மக்களுக்குப் பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கின்றார்கள். அவற்றை இந்த மாமன்றத்திலே பதிவு செய்யவேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இதுபோன்ற வினாக்களை எழுப்புகிறார். அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

நம்முடைய வரலாற்று முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியிலே ரூ.27 கோடியே 10 இலட்சம் செலவிலே துறைமுகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதேபோல, தேங்காய்பட்டினத்தில் ரூபாய் 40 கோடி செலவிலே மீன்பிடித் துறைமுகம் அமைக்கின்றப் பணி நடைபெற்று வருகிறது. முட்டம் பகுதியில் ரூ.42 கோடி செலவிலே மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இராஜாக்கமங்கலம் துறையிலே ரூ.36 கோடி செலவிலே மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நாகை மாவட்டம், பூம்புகாரிலே ரூ.60 கோடி செலவிலே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல, இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் பகுதியிலே மீன்பிடித் துறைமுகம் ரூ.60 கோடி செலவிலே அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழகத்திலே இருக்கக்கூடிய நாட்டுப் படகுகளினுடைய விவரங்கள்: மரத்திலான வல்லம் 8,315; F.R.B. வல்லம் 13,583; மரத்திலான கட்டுமரங்கள் 22,093; F.R.B. கட்டுமரங்கள் 10,172 இருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, ஒரு தகவலை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

*2011 பிப்ரவரி 9]*

அண்மையிலே நம்முடைய தமிழகத்தின் வரலாற்று முதல்வர் ஐயா, கலைஞர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருக்கக்கூடிய மீனவ மக்கள் பயன்படுகின்ற வகையிலே, நாட்டுப் படகு மீனர்வகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குகின்ற திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக, சிறப்பாக மத்திய அரசின் மூலமாக, வர்த்தகரீதியாக ஒரு லிட்டர் மண்ணெண்ணெயை ரூ.43.94 பைசாவிற்குப் பெற்று, இன்றைக்கு மீனவ மக்களினுடைய பயன்பாட்டிற்கு ரூ.25/—க்கு, ஆண்டுக்கு ரூ.80 கோடி மானிய விலையிலே வழங்குகின்ற முதல்வர், நம்முடைய வரலாற்று முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்திலே இருந்த முதலமைச்சர் அவர்கள் இந்த 3 மாவட்ட மீனவர்களுக்கும்—ஒரு தகவலை நான் சொல்வது அவசியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், அவர்கள் கேட்டதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.27/—க்கு கொடுத்தவர், கடந்த கால முதலமைச்சர் என்பதனை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**40—**

## கட்டட வசதி

***113743—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை E.D. 493 புதுவலசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?